Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 76 | வியாழக்கிழமை Thursday | 15.01.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

# பொங்கல் திருநாளை முன்னிட்டு அனைவரது உள்ளங்களிலும் இல்லங்களிலும் மகிழ்ச்சி பொங்கட்டும்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து



சென்னை:

'எல்லார்க்கும் எல்லாம்' என்ற உயரிய இலக்கை நோக்கி, சமத்துவ நிலையை அனைவரும் அடைந்திடும் நோக்கத்தோடு, திராவிட மாடல் அரசு பணியாற்றிக் கொண்டிருக்கிறது என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் தெரிவித்தார்.

பொங்கல் பண்டிகை உலகம் முழுவதும் கொண்டாடப்படும் நிலையில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் சமத்துவப் பொங்கல்விழாகொண்டாட்டம் களைகட்டியுள்ளது. இந்த நிலையில், சென்னை தலைமைச் செயலகத்தில் அரசு அலுவலர்கள் பங்கேற்ற சமத்துவப் பொங்கல் விழா நடைபெற்றது. இதில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கலந்து கொண்டு, பொங்கல் பானையில் பொங்கல் வைத்து, தலைமைச் செயலக அலுவலர்களுடன் பொங்கல் விழாவை கொண்டாடினார். இந்த விழாவில் வேட்டி,சட்டை அணிந்து முதல்வர் ஸ்டாலின் வந்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் நாதஸ்வர இசை நிகழ்ச்சியை கேட்டு ரசித்தார். மேலும், தலைமைச் செயலாளர், துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள்,அரசு உயர் அலுவலர்கள் மற்றும் தலைமைச் செயலக அலுவலர்களுக்கு பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் சமத்துவப் பொங்கல் விழாவில் உரையாற்றினார். அப்போது பேசிய அவர், "தமிழ்நாடு முழுவதும் நாம் சமத்துவப் பொங்கலை கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற இலக்கை நோக்கி, சமத்துவ நிலையை அனைவரும் அடைந்திடும் நோக்கத்தோடு,நம்முடைய திராவிட மாடல் அரசு பணியாற்றிக் கொண்டிருக்கிறது.

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், உழைத்துக் கொண்டிருக்கிறது. உழைத்துக் கொண்டிருப்பவர்கள் என்று சொன்னால், நாங்கள் மட்டுமல்ல, நீங்களும் சேர்ந்து தான் உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள். தமிழ்நாட்டுமக்களின்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தலைமைச் செயலகத்தில் நீங்கள் எல்லோரும் நேரம்

, காலம் பார்க்காமல், உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட உங்களோடு, இந்த பொங்கலை கொண்டாடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

*Recommended For You*

"கேம் விளையாட, வீடியோ பார்க்க அல்ல.. லேப்டாப்பை கல்விக்கு யூஸ் பண்ணுங்க" உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்

""கேம் விளையாட, வீடியோ பார்க்க அல்ல.. லேப்டாப்பை கல்விக்கு யூஸ் பண்ணுங்க" உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்"

இந்தமகிழ்ச்சி,உங்கள் உள்ளங்களிலும், உங்களுடைய இல்லங்களிலும், பொங்கட்டும் பொங்கட்டும் என்று இந்த இனிய நேரத்தில் எடுத்துச் சொல்லி, உங்கள் அனைவருக்கும் என்னுடைய பொங்கல் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று பேசினார் முதல்வர் ஸ்டாலின்.




# பொங்கல் ஒரு உலகளாவிய விழாவாக மாறிவிட்டது; பொங்கல் விழா கொண்டாட்டத்தில் பிரதமர் மோடி பேச்சு



புதுடெல்லி,

தமிழகத்தின் மிகுந்த உற்சாகத்துடன், நீண்ட நாட்கள் தொடர்ந்து கொண்டாடப்படும் பண்டிகையாக பொங்கல் பண்டிகை திகழ்கிறது. அனைத்து வீடுகளிலும் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும், உறவினர்களும் ஒன்றிணைந்து, தமிழர்களின் பாரம்பரிய மரபுகளை நினைவுபடுத்தும் வகையில் இந்தப் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

இந்த நிலையில், மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் மீன்வளத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல். முருகன், ஆண்டுதோறும் டெல்லியில் உள்ள தனது இல்லத்தில், தமிழர்களின் பாரம்பரியம் மாறாமல் பொங்கல் விழாவைக் கொண்டாடி வருகிறார். "ஒரே பாரதம் - உன்னத பாரதம்" என்ற நோக்கத்தின் அடிப்படையில் நடைபெறும் இந்த விழாவில்,முக்கியத்தலைவர்கள் கலந்துகொள்வது வழக்கம். அந்த வகையில், எல். முருகன் இல்லத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் பிரதமர் மோடி பங்கேற்றார். இந்த விழாவில் தமிழகத்தைச் சேர்ந்த பாஜக தலைவர்களும் கலந்து கொண்டனர். நடிகர்கள் சிவகார்த்திகேயன், ரவி மோகன் உள்ளிட்ட பராசக்தி படக்குழுவினரும் இதில் பங்கேற்றனர். இந்தப் பொங்கல் விழாவில் பிரதமர் மோடி, "இனிய பொங்கல் நல்வாழ்த்துகள்" என்று தமிழில் கூறி உரையைத் தொடங்கினார்.

மோடி பேசியதாவது:

"தமிழர் வாழ்வில் விவசாயிகளின் மகத்துவத்தையும், வேளாண்மையைப் போற்றுவதையும் வெளிப்படுத்தும் சிறப்பான பண்டிகை பொங்கல். வேளாண்மையை போற்றும் பண்டிகைதான் பொங்கல். பொங்கல் பண்டிகையை சர்வதேச திருவிழாவாகக்கொண்டாடுவது அளவில்லாத மகிழ்ச்சியை அளிக்கிறது. தமிழ் மக்களுடன் பொங்கலைக் கொண்டாடுவதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி.

தமிழ் கலாசாரத்தில் உழவர்களே வாழ்வின் ஆதாரம் என்று போற்றப்படுகிறார்கள். தமிழர் வாழ்வில் விவசாயிகளின் மகத்துவத்தையும், வேளாண்மையைப் போற்றுவதையும் பிரதிபலிக்கும் பண்டிகைதான் பொங்கல். பொங்கல் இன்று ஒரு உலகளாவிய விழாவாக மாறியுள்ளது.தமிழர்களுக்கும் விவசாயிகளுக்கும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆழமான தொடர்பை வெளிப்படுத்தும் திருக்குறள் இருந்துள்ளது" என்று அவர் பேசினார்.

# ஒரு கிலோ ரூ. 3 லட்சத்தைக் கடந்த வெள்ளி! வரலாறு காணாத புதிய உச்சம்;



சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.880 உயர்ந்து மீண்டும் புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது. வெள்ளி விலை வரலாற்றில் இல்லாத உச்சமாககிலோவுக்கு ரூ15,000 உயர்ந்து முதல் முறையாக ரூ. 3 லட்சத்தைக் கடந்தது.

சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கம் விலை கிராமுக்கு ரூ.110 உயர்ந்து ஒரு கிராம் ரூ.13,280-க்கும், சவரனுக்கு ரூ.880 உயர்ந்து ஒரு சவரன் 1,06,240-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்துடன் போட்டிபோடும் வெள்ளி விலை நேற்றைப் போலவே இன்றும் ஒரு கிலோவுக்கு ரூ. 15,000 உயர்ந்துள்ளது.

(ஜன.14) ஒரேநாளில் கிராமுக்கு ரூ.15 உயர்ந்து ஒருகிராம் ரூ. 307-க்கும்,ஒருகிலோவுக்கு ரூ.15,000-ம் உயர்ந்து ரூ.3,07,000 என்ற வரலாறு காணாத புதிய உச்சத்தை எட்டியுள்ளது. கடந்த மூன்று நாள்களில் மட்டும் வெள்ளி விலை ரூ.30,000 உயர்ந்திருக்கிறது.

உலகளாவிய வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள பதற்றம், அமெரிக்காவின் வரிவிதிப்பு, ஈரான் போர்ப்பதற்றம் உள்ளிட்டவற்றால் தங்கம் வெள்ளி ஆகியவற்றின் மீதான முதலீடு அதிகரிப்பால் ஏற்பட்டுள்ள விலையேற்றத்தால் இல்லத்தரசிகள் மற்றும் மக்கள் மீண்டும் கலக்கமடைந்துள்ளனர்.

மேலும், மார்கழி மாதம் முடிந்து தை மாதப் பிறப்பையொட்டி சுப விசேஷங்களால் மீண்டும் தங்கம் விற்பனை அதிகரிக்கக் கூடும் என்றும், இதனால் தொடர்ந்து விலையேற்றம் இருக்கலாம் என்றும் பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt







# யுனைடெட் கல்வி குழுமமும் ரோட்டரி சங்கமும் இணைந்து பாரம்பரிய மங்கை வள்ளி கும்மியோடு பொங்கல் திருவிழா

## பல்வேறு போட்டிகள் நடத்தி, சினிமா பாடல்களுக்கு நடனம்




கோவை பெரியநாயக்கன்பாளையம் யுனைடெட் கல்வி குழுமமும் ரோட்டரி கோயம்புத்தூர் எலைட் சங்கமும் இணைந்து பொங்கல் திருவிழாவை கல்லூரி வளாகத்தில் கொண்டாடினர்.தமிழரின் பாரம்பரிய நடனமான மங்கை வள்ளி கும்மியோடு துவங்கிய இந்நிகழ்வில் மாணவிகள் புதிய பொங்கல் பானை, பச்சை மாவு மற்றும் முளைப்பாளிகை ஏந்தி பம்பை இசையுடன் ஊர்வலமாக வந்து பொங்கல் வைத்தனர்.

யுனைடெட் கல்வி நிறுவனங்களின் நிறுவனர் மற்றும் தலைவர் பொறியாளர் சண்முகம் தலைமையில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கோயம்புத்தூர் எலைட் சங்கத்தின் தலைவர் கோபிநாத், கோயம்புத்தூர் எலைட் சங்கத்தின் செயலாளர் ஸ்ரீனிவாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். யுனைடெட் கல்வி நிறுவனங்களின் செயலாளர் அருண்கார்த்திகேயன் வாழ்த்துரை வழங்கினார்.

இந்த பொங்கல் விழாவில் யுனைடெட் கல்வி நிறுவனங்களின் யுனைடெட் தொழிநுட்ப கல்லூரி, யுனைடெட் கலை அறிவியல் கல்லூரி, யுனைடெட் நர்சிங் கல்லூரி, யுனைடெட் பார்மஸி கல்லூரி, யுனைடெட் பிசியோதெரபி கல்லூரி, யுனைடெட் ஹெல்த் சயில்ன்ஸ் கல்லூரி உள்ளிட்ட கல்லூரிகள் சார்பில் தனித்தனியாக குடில்கள் அமைத்து பொங்கல் வைத்தனர். இதில் சிறந்த பொங்கலுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

மேலும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக ஊர்க்காவல் படையினைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டு பொங்கல் வைத்தும், போட்டிகளில் பங்கேற்றும் சிறப்பித்தனர்.

தொடர்ந்து கோலப்போட்டி, உறி அடித்தல், லக்கி கார்னர், கயிறு இழுத்தல் போன்ற பல்வேறு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும் சிலம்பம், மயிலாட்டம், ஒயிலாட்டம் மற்றும் மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சினிமா பாடல்களுக்கு நடனமாடி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்வில் ரோட்டரி கோவை எலைட் சங்கத்தின் உறுப்பினர்கள், யுனைடெட் கல்லூரிகளின் முதல்வர்களும், பேராசிரியர்களும் மாணவ மாணவியரும் கலந்து கொண்டனர். பொங்கல் விழாவினை யுனைட்ட கல்வி நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர் முனைவர் சிவகுமார் ஒருங்கிணைத்தார்.



# கோவை ஆலாந்துறை அடுத்த காந்திநகர், பகுதியில், தமிழக அரசின் சார்பாகவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக வன்கொடுமைத் தடுப்பு சட்டம் குறித்த விழிப்புணர்வு முகாம்

கோவை மாவட்டம் ஆலாந்துறை அடுத்த செம்மேடு காந்திநகர் பகுதியில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக வன் கொடுமைத் தடுப்பு சட்டம்குறித்தவிழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர் உத்தரவின் பேரில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில், கோவை மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை தனி வட்டாட்சியர் நாகராஜன், கலந்து கொண்டு பொதுமக்கள் மத்தியில் சிறப்புரையாற்றினார். இதனை தொடர்ந்து இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் எஸ்.இ-எஸ்டி சமூக மக்களுக்குஎதிரானவன் கொடுமை தடுப்பு சட்டம் குறித்து வழக்கறிஞர் ஜார்ஜ் விளக்கவுரையாற்றினார். அப்பொழுது அவர் கூறியதாவது , மேலும்குற்றவாளிகளை விரைந்து கைது செய்து தண்டிக்க வழிவகை செய்கிறது, குறிப்பாக பிரிவு 3-ன் கீழ் பல குற்றங்கள் வரையறுக்கப்பட்டுள்ளதாகவும்,இதில் முக்கிய அம்சங்களின் நோக்கமாக , எஸ்இ எஸ்டி பிரிவினருக்கு எதிரான வன்முறை,துன்புறுத்தல், இழிவுபடுத்துதல் போன்ற செயல்களைத் தடுத்தல்,சட்டபிரிவு இந்திய பாராளுமன்றத்தால் 1989-ல் இயற்றப்பட்டது சட்ட எண் 33/1989, எனவும்,குற்றங்களின் வரையறையாக வன்கொடுமை என்ற சொல்லுக்குச் சட்டப்பூர்வ விளக்கத்தை அளித்து, பிரிவு 3-ன் கீழ் பல குற்றங்களை வரையறுத்துள்ளது.

இந்தச் சட்டத்தின் கீழ் வரும் குற்றங்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கபடுகிறது , மேலும் இதில் உடனடி கைது மற்றும் விசாரணைக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2015-ல் கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்டம் 2016-ல் நடைமுறைக்கு வந்து, குற்றங்களின் பட்டியலை விரிவுபடுத்தியதாகவும் தெரிவித்தார். இதனை அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் கேட்டு விழிப்புணர்வு பெற்றனர். இந்த நிகழ்ச்சியில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை உறுப்பினர் சுரேஷ் குமார், தமிழ் புலிகள் கட்சி சார்பாக நந்தன் தம்பி, நொய்யல் வெள்ளியங்கிரி, சுரேஷ், சதிஷ், விஜயகுமார், பவித்ரன், ஜீவா, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திமுக துடியலூர் மேற்கு பகுதியில் திராவிடப் பொங்கல் விழா பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன



கோவை மாநகராட்சி ஒன்றாவது வார்டுக்கு உட்பட்ட பகுதிகளில் தி மு க துடியலூர் மேற்கு பகுதி சார்பில் திராவிடப் பொங்கல் விழா விமர்சையாக கொண்டாடப்பட்டது. இதில் பொதுமக்கள் மற்றும் குழந்தைகளுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.முகஸ்டாலின் உத்தரவின்படி, துணை முதல்வர் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி, முன்னாள் அமைச்சர் வி செந்தில்பாலாஜி ஆலோசனையின்படி, மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர்ரவி, தொகுதி பொறுப்பாளர் மூலனூர் கார்த்தி ஆகியோரின் ஆதரவுடன், துடியலூர் மேற்கு பகுதியில், "திராவிட பொங்கல் விழா" நடத்தப்பட்டது.

கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட ஒன்றாவது வார்டு பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும்குழந்தைகளுக்கு கோலப்போட்டிகள், தடகள போட்டி, சைக்கிள் போட்டி, கிரிக்கெட் போட்டி, லெமன் ஸ்பூன், மியூசிக்கல் சேர், லக்கி கார்னர் உள்ளிட்ட பலவேறு போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் திரளானோர் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

தொடர்ந்து போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்கப்பரிசு மற்றும் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது.

பகுதி கழக பொறுப்பாளர் ப இராஜசேகரன் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்விழாவில் மாவட்ட விவசாய அணிஅமைப்பாளர் சந்திரசேகரன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பிரபாகரன், மாமன்ற உறுப்பினர் இரா.கற்பகம், வட்டக் கழகச் செயலாளர் ஈஸ்வரன்,பகுதி கழகநிர்வாகிகள் ராக்கிமுத்து, கோவைசம்பத், பழனிச்சாமி, வட்ட கழக நிர்வாகிகள் சம்பத்குமார், வெங்கடேஷ், சேது, உதயகுமார், ராஜேஸ்வரி, சின்னு, ஜெயக்குமார், நவீன், கார்த்தி, கணகு, சாம்ராஜ், செல்வி, பூங்கொடி, சாந்தி, அனுஷா, சுலோச்சனா, கிருஷ்ணவேணி, மாதேஸ்வாமி, பிரகாஷ், சுரேஷ், சங்கீதபிரியா, பிரியா, சத்யா, இந்துமதி, விஜயா, அனிதா, முருகேஷ், நவநீதகிருஷ்ணன், ஹரி, சிவதர்ஷன், அபுதாகிர், அபிநயா, ஜெய்கிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினர்.



அஸ்வந்த் அசட்ஸ் ,& லேண்ட் ப்ரோமொமோட்டர்ஸ் பொங்கல் விழா கொண்டாட்டம் அஸ்வந்த் அசட்ஸ் அலுவலகத்தில் விற்பனை பிரதிநிதிகள் நிறுவனர் மேலாளர் பணி புரியும் ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பாக பொங்கல் வைபவம் கொண்டாடப்பட்டது

# பறை இசைக்கு நடனமாடிய தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்த குமாரி

## மாநகராட்சி பணியாளர்களுடன் சமத்துவ பொங்கல் உற்சாக கொண்டாட்டம்



தாம்பரம் மாநகராட்சி சார்பாக சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது இதில் மாநகராட்சிக்கு உட்பட்ட ஐந்து மண்டலங்களிலும் பணியாற்றும் பணியாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் என ஏராளமானேர் கலந்து கொண்டு பொங்கல் வைத்து வழிபட்டனர்.

பணியாளர்கள் மற்றும் அரசு பள்ளி மாணவர்களுக்கும் தனித்தனியாக கோலப்போட்டி, பானை உடைத்தல், துப்பாக்கி சூடுதல், கட்டுரைபோட்டி போன்ற போட்டிகள் நடைபெற்றது.

இதில் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கலந்து கொண்டு பச்சரிசி இட்டு பொங்கல் வைத்தார் அதனை தொடர்ந்து தப்பாட்டம் செண்டை மேளம் மயிலாட்டம் ஒயிலாட்டம் என பல்வேறு பாரம்பரிய நிகழ்வ பறை இசை கலைஞர்களுடன் தாம்பரம் மேயர் வசந்தகுமாரி மற்றும் ஆணையாளர் பாலச்சந்தர் நடனமாடி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்..

# தென்காசி யுஎஸ்பி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் சமத்துவ பொங்கல் விழா



தென்காசி மாவட்டம் கொடிக்குறிச்சியில் இயங்கி வரும் யுஎஸ்பி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் சமத்துவ பொங்கல் விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் அனைத்து மாணவமாணவிகளும்நமதுபாரம்பரியஉடைகளான வேஷ்டி, சட்டை,சேலை, பட்டுப்பாவாடை, தாவணி அணிந்து வந்திருந்தனர். ஒவ்வொரு வகுப்பு மாணவர்களும் தனித்தனியாக அடுப்பு வைத்து பொங்கலிட்டனர்.இவ்விழாவில்பள்ளியின்தாளாளர் செல்வராஜ்,செயலாளர்சகாயசெல்வமேரிஆகியோர் தலைமை தாங்கினார்கள். பள்ளி முதல்வர் அந்தோணி பால்ராஜ் அனைவரையும் வரவேற்று பேசி பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். மாணவர்கள் அனைவரும் பொங்கலோ பொங்கல் என்று கூவி குலவையிட்டு தங்களது மகிழ்ச்சியினை ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்து கொண்டது புது அனுபவமாக இருந்தது என்றும் தங்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது என்றும் பெருமையுடன் கூறினார்கள். விழாவின் இறுதியில் அனைத்து மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இனிப்புபொங்கல்வழங்கப்பட்டது.இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மிகச் சிறப்பாக செய்திருந்த நிர்வாகம் பள்ளி முதல்வர் மற்றும் ஆசிரியர்களை மாணவர்களும் பெற்றோர்களும் வாழ்த்தி பாராட்டினர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (14.01.2026) ஈரோடு மாநகராட்சி, மண்டலம் 3 வார்டு எண் 34, வாமலை வீதியில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழா 2026 ல் கலந்துகொண்டு, சிலம்பம் நிகழ்த்தி காட்டிய மாணவியர்களுக்கு பரிசு பொருட்கள் வழங்கி, வாழ்த்துக்களைத் தெரிவித்தார். உடன் ஈரோடு மாநகராட்சி துணை ஆணையர் கு.தனலட்சுமி, 3ஆம் மண்டலத்தலைவர்சசிகுமார், செயற்பொறியாளர்ஆனந்த் உட்பட பலர் உள்ளனர்.

# தமிழகத்தில் அடுத்த 2 நாள்களுக்கு பனிமூட்டம்!

பனிமூட்டம்:தமிழகம்மற்றும்புதுவையில்இன்றும், நாளையும் லேசான பனிமூட்டம் நிலவும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, ஜன. 15, 16ல் மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

ஜன. 17 முதல் 18 வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

குறைந்தபட்ச வெப்பநிலை

16-01-2026 முதல் 17-01-2026 வரை: தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் குறைந்தபட்சவெப்பநிலைஇயல்பாகஇருக்கக்கூடும்.

குறைந்தபட்ச வெப்பநிலையில் மாற்றதிற்கான வாய்ப்பு குறைவு. எனினும், ஓரிரு இடங்களில் சற்று குறைவாக இருக்கக்கூடும்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் தாலுக்கா ஐ.ஐ.647 பொ.மெய்யூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் திரு கே.செந்தில் முருகன் செயலாளர் அவர்களின் தலைமையில் சமத்துவ பொங்கல் விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது மேலும் உடன் எஸ்.அமிர்தலிங்கம் உதவிச்செயலாளர் வை.குமரவேல் முதுநிலை எழுத்தர் த.இளையபெருமாள் சிற்றெழுத்தர் தி.பாலதண்டாயுதம் எழுத்தர் மற்றும் விற்பனையாளர்கள் அனைவரும் உடன் இருந்து சமத்துவ பொங்கலை வெகு சிறப்பாக கொண்டாடினர் .

# செட்டிநாடு பப்ளிக் பள்ளியில் பொங்கல் விழா கொண்டாட்டம்



காரைக்குடி அருகே மானகிரியில் உள்ள செட்டிநாடு பப்ளிக் பள்ளியில் பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவில் பள்ளி முதல்வர் உஷாராணி வரவேற்றார். பள்ளி தலைவர் திரு. எஸ்பி. குமரேசன் அவர்கள் முன்னிலை வகித்தார். பள்ளி துணைத்தலைவர் அருண் குமார் மற்றும் பள்ளி நிர்வாகிகள் திருமதி சாந்தி குமரேசன், திருமதி ப்ரீத்தி அருண் குமார் ஆகியோர் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

பள்ளி தலைவர் திரு. எஸ்பி.குமரேசன் அவர்கள் விழாவைத் துவக்கி வைத்து பேசுகையில், "பாரம்பரியமான பண்பாட்டு விழாக்களை மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அதன்மூலம் இந்திய விழாக்களின் சிறப்பை உணர முடியும்" என்றார்.

தமிழர் பண்பாட்டின் அடையாளமான விழா பொங்கல். விவசாயம் மற்றும் விவசாயப் பண்பாட்டினை வெளிப்படுத்தும் திருநாள். தமிழகத்தின் தனித்துவமான விழாவான பொங்கல், விவசாயிகளின் உழைப்புக்கு நன்றி தெரிவிக்கும் நாளாகும் என்பதை தன் உரையில் எடுத்துரைத்தார். இவ்விழாவின் சிறப்பினை அறிந்து அயர்லாந்தை சேர்ந்த விருந்தினர்கள் பள்ளிக்கு வருகைபுரிந்து மாணவர்களுடன் பொங்கல் விழாவை கொண்டாடினர்.

விழாவின் போது மாணவர்கள் பாரம்பரிய உடை அணிந்து, மண் பானையில் பொங்கல் வைத்து மகிழ்ந்தனர். பள்ளி வளாகத்தில் கோலங்கள் இட்டு, கரும்பு, மஞ்சள், வாழை உள்ளிட்ட பொருட்களை கொண்டு அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன.

பொங்கல் விழாவை முன்னிட்டு பெற்றோர்களுக்காக ஃபயர் லெஸ் குக்கிங் போட்டி நடத்தப்பட்டது. இதில் பெற்றோர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். பொங்கல் விழாவின் ஒரு பகுதியாக, பாரம்பரிய விளையாட்டுக்களான உறி அடித்தல், கயிறு இழுத்தல் போன்றவற்றை மாணவர்களும் ஆசிரியர்களும் விளையாடி மகிழ்ந்தனர்.

இறுதியில் பள்ளி துணை முதல்வர் திருமதி பிரேம சித்ரா நன்றியுரை கூறினார். விழாவின் இறுதியில் அனைவருக்கும் கரும்பு வழங்கப்பட்டது.

# தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக சார்பில் சமத்துவ பொங்கல் மற்றும் கோலப்போட்டி விழா 2026





தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவை முன்னிட்டு தூத்துக்குடி மாநகராட்சி பகுதியான 27வது, 28வது வார்டு தெருவிலும் நடைபெற்ற கோலப்போட்டியை கிழக்கு மண்டல தலைவர் கலைச்செல்வி போட்டியை துவக்கி வைத்தார். மேலும் கோலப்போட்டியினை சிறந்த கோலத்தினை தேர்ந்தெடுக்க மாமன்ற உறுப்பினர்கள் மரியகீதா, ராமு அம்மாள், ஜெயசீலி, நாகேஸ்வரி, பவானி மார்ஷல் தேர்ந்தெடுத்தார்கள். இதில் அனைத்து பகுதிகளிலும் ஏராளமான பெண்கள் மற்றும் பொதுமக்கள் ஆர்வத்துடன் கோல போட்டியில் கலந்து கொண்டனர்.

தொடர்ந்துதூத்துக்குடி அறிஞர் அண்ணா மண்டப வளாகத்தில் வைத்து திராவிடப் சமத்துவ பொங்கல்மற்றும்பொங்கல் விளையாட்டு விழா நடைபெற்றது.

பல்வேறுவிளையாட்டு போட்டிகளில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பங்கேற்றனர். பெண்களுக்கான கோலப்போட்டிகள் நடைபெற்றன.

விழாவிற்கு வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளரும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

நிகழ்ச்சியில், 27வது வார்டு மாமன்ற உறுப்பினர் சரண்யா ராஜ்குமார், மாவட்ட பிரதிநிதி ராஜ்குமார், பங்குத்தந்தை அமலதாஸ் அடிகளார், அல்போன்ஸ் ராயர், ஜும்மா பள்ளிவாசல் முகைதீன், ஜனாப் சம்சுதீன் ரியாஜி, ஜனாப் அஜிஸ், ஜனாப் மாரூப், ஜனாப் அசனார், ஜனாப் மஸ்தான், கருப்பசாமி கோவில் அர்ச்சகர்கள் மந்திர மாரியப்பன், கைலாச பட்டர், வட்டச் செயலாளர் சாமிநாதன், அவைத் தலைவர் மாயாண்டி, வட்டத் துணைச் செயலாளர் கந்தன்,லெட்சுமி,பொருளாளர் சரவணன், வட்ட பிரதிநிதிகள் சந்தனராஜ்,ஷேல்டன்,மோகன்ராஜ், ராம் வெங்கடேஷ், சுப்பிரமணியன், மைதீன் பாட்ஷா, ஆஷிக், கழக நிர்வாகிகள் பைடல், தனபால், பாசில், மாரியப்பன்,நாகராஜன்,மாபுஜான், ஆதம், ராஜா, பரகத்துல்லா, சம்சுதீன், முரளி, மாரியப்பன், ராபியா பர்வீன், ரோஸி, சீதாலட்சுமி, தவுலாத், ஒலிமுத்து, விக்டோரி, ஆறுமுகம், காமாட்சி, மஜீத் செய்யது அகமது மசூத், சண்முகநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் (13.01.2026) தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே. கமல்கிஷோர், தலைமையில் சமத்துவ பொங்கல் விழா 2026 நடைபெற்றது.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் ஆட்சியர் அலுவலகத்தில் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் மண்பானையில் பொங்கல் வைத்து கரும்பு இஞ்சிகளோடு பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அழகுமீனா கலந்து கொண்டார்.



தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழகம் சார்பாக தூத்துக்குடி திரேஷ்புரம் அருகில் வைத்து சமத்துவ பொங்கல் விழா தூத்துக்குடி மாவட்ட பொறுப்பாளர் அஜிதா ஆக்னல் தலைமையில் நடைபெற்றது. இதில் அனைத்து சமுதாயத்தினரும் இணைந்து கொண்டாடும் சமத்துவ பொங்கல் விழா, சமூக நல்லிணக்கத்தையும், ஒற்றுமையையும் வலியுறுத்தும் வகையில் சமத்துவ பொங்கல் விழாவில் தமிழக வெற்றிக்கழக தோழர்கள் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும்ஒன்றிணைந்து,வண்ணமயமானபாரம்பரியஉடையணிந்து,பொங்கலிட்டு, பண்பாட்டு நிகழ்ச்சிகளுடன் சமத்துவ பொங்கல் விழாவை உற்சாகமாக கொண்டாடினர். இது, தமிழர் திருநாளாம் பொங்கலின் உண்மையான சாராம்சத்தையும், சமூகத்தின் அனைத்து தரப்பினரின் பங்களிப்பையும், ஒற்றுமையையும் வெளிப்படுத்தியது. நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.





ஈரோடு மாவட்டத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் சமத்துவ தை பொங்கல் விழா பெருந்துறை சாலையில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் ஈரோடு மாவட்ட தலைவர் பி.விஜயகுமார் தலைமையில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகளுக்கு மாநில துணை தலைவர் , முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் விடியல் சேகர் பொங்கல்,இனிப்புகள் ,சேலை ,வேட்டி வழங்கி பொங்கல் பண்டிகை வாழ்த்துக்களை தெரிவித்தார்.இவ்விழாவில் மூத்த தலைவர் எஸ். டி.சந்திரசேகர், ஜெகதேஷ், வட்டார தலைவர் புவனேஷ்,ரபீக், பிரகாஷ், சரவணன்,கண்ணன், கண்ணம்மா,கொற்றவேல், சம்பத்,மோகனா,சின்னதுரை,மஞ்சள் தேவராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

# அச்சிறுப்பாக்கம் அருகே தமிழ்மாமணி சிறந்த மாமனிதர் விருது



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அடுத்த திம்மாபுரம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களுக்கு நாமக்கல்லில் முத்தமிழ் கலைச்சங்க அறக்கட்டளை சார்பில் மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு நாமக்கல் கவிஞர் டாக்டர் இளங்கோ அவர்களுடைய 2025 ம் ஆண்டிற்கான தமிழக அளவில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்களை தேர்வு செய்து பாராட்டும் சிறப்பு விருது வழங்கும் நிகழ்ச்சியில் திம்மாபுரம் ஊராட்சி சிறந்த ஊராட்சியாக தேர்வு செய்து சிறப்பாக பல்வேறு பணிகளை செய்து கிராமத்தை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்லும் ஊராட்சி மன்ற தலைவர் எம். கெங்கதுரை Bsc,அவர்களுக்கு "உழைப்பால் உயர்ந்தவர்"என்பதற்கான " தமிழ்மாமணி சிறந்த மாமணிதர் விருது எனும் உயர்ந்த விருதுநினை வழங்கி மகிழ்வுடன் பாராட்டி நற்சான்றிதழ் வழங்கப்பட்டது இந்த விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றிய பெருங்குழு தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் அனைத்து துறை துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர் விருது வென்ற திம்மாபுரம் ஊராட்சி மற்றும் ஊராட்சிமன்றதலைவர் எம் கெங்காதுரை அவர்களை அனைவரும் பாராட்டி வாழ்த்தினர் திம்மாபுரம் ஊராட்சிக்கு ஏற்கனவே மூன்று விருதுகள் வழங்கப்பட்டு இருந்த நிலையில் தற்பொழுது நான்காவது விருதினை பெற்று தமிழக அளவில் சிறந்து விளங்கும் ஊராட்சிகளில் ஒன்றாக வளர்ச்சி பாதையில் பயணிக்கிறது

# உளுந்தூர்பேட்டையில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நடைபெற்ற ஆட்டு சந்தையில் 2 கோடி ரூபாய்க்கு ஆடுகள் விற்பனை



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் இன்று அதிகாலை பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஆட்டு சந்தை நடைபெற்றது அதிகாலை 5 மணி முதல் தொடங்கிய ஆட்டு சந்தை 8 மணி வரை விறுவிறுப்பாக நடைபெற்றது இதில் உளுந்தூர்பேட்டை திருக்கோவிலூர் கள்ளக்குறிச்சி பண்ருட்டி விருத்தாசலம் உட்பட பல்வேறு பகுதிகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான விவசாயிகள் தங்கள் வளர்த்து வந்த ஆடுகளை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர் இதை போல் திருவண்ணாமலை வேலூர் புதுச்சேரி மதுரை ராமநாதபுரம் பெரம்பலூர் உட்பட பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் ஆடுகளை வாங்குவதற்காக உளுந்தூர்பேட்டை ஆட்டுசந்தையில்குவிந்தனர்இதனால்அதிகாலையில் இருந்து ஆட்டு சந்தை விறுவிறுப்பாக நடைபெற்றது பனிக்காலம்என்பதால்பண்டிகைகாலங்களில்வரும் ஆண்டுகளின் எண்ணிக்கையை விட இன்று சற்று குறைந்தஅளவுஆடுகள்வந்திருந்தாலும்வழக்கத்தை விட கூடுதலாக ரூபாய் 8000 முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை ஆடுகள் விற்பனை நடைபெற்றதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர் மேலும் குறைந்த அளவில் ஆடுகள் வந்ததால் அதிக விலைக்கு விற்பனை நடைபெற்றதாக வியாபாரிகள் தெரிவித்தனர் சுமார் 3 மணி நேரத்தில் 2 கோடி ரூபாய்க்கு மேல் உளுந்தூர்பேட்டை ஆட்டு சந்தையில் ஆடுகள் விற்பனை நடைபெற்றது. உளுந்தூர்பேட்டை ஆட்டு சந்தையில் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் குவிந்ததால் இன்று ஆட்டு சந்தை களைகட்டி காணப்பட்டது.



ஈரோடு தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் திராவிடபொங்கல் 2026 முன்னிட்டு, மாவட்ட அமைப்பாளர் ஜெ.திருவாசகம் ஏற்பாட்டில் , மாநகரச் செயலாளர் சுப்பிரமணியம் தலைமையில் ஈரோடு மாநகர துணை செயலாளர்கள் சந்திரசேகர் ,பாத்திமா பொதுக்குழு உறுப்பினர்கள் மகாலிங்கம், பல்கீஸ் பகுதி செயலாளர் அக்னி சந்திரசேகர் மற்றும் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் ரகுராம் ,நித்தின் மாநகர துணை அமைப்பாளர்கள் சீனிவாசன் ,அன்பரசன் முன்னிலையில் 350 க்கும் மேற்பட்ட ஒன்றிய பகுதி பேரூர் இளைஞரணி அமைப்பாளர்கள் & துணை அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு வேஷ்டி, சேலை மற்றும் பாத்திரங்கள் அடங்கிய பொங்கல் தொகுப்பு வழங்கப்பட்டது. அதை தொடர்ந்து அனைவருக்கும் சைவஅசைவ விருந்து அளிக்கப்பட்டது.



ஈரோடுமாவட்டத்தில்உள்ளகஸ்பாபேட்டைபகுதியில்அமைந்திருக்கும்கர்ணாலயம் குழந்தைகள் ஆசிரமத்தில் தமிழக அன்பின் கரங்கள் அறக்கட்டளை அமைப்பின் மூலமாக சமத்துவபொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது . இந்த நிகழ்ச்சியில் நிறுவனத் தலைவர் டாக்டர் ரமேஷ் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு பொங்கல் வழங்கினார் ஆசிரமம் நிர்வாகி சரஸ்வதி சசிகுமார் ஷைனி மற்றும் மாணவச் செல்வங்கள் கலந்து கொண்டனர் பொங்கல் விழாவுக்கு உதவிய அமைப்பின் அனைத்து நல் உள்ளங்களுக்கும் நிறுவனத் தலைவர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள அரையப்பாக்கம்ஊராட்சியில்ஊராட்சிமன்றதலைவர்மோகன்அவர்களின்தலைமையில் பச்சரசி வெல்லம் புதுப் பாணையில் சமத்துவ பொங்கலிட்டு பொங்கி வரும்போது பொங்கலோ பொங்கல் என முழக்கமிட்டு படையிலிட்டு விமர்சையாக நடைபெற்ற நிகழ்ச்சியில் மகளிர்க்கான கோலப்போட்டி கயிறு இழுத்தல் உள்ளிட்ட போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு பொருட்கள் இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது இதில் ஊராட்சி மன்ற துணை தலைவர் உஷாகோபி உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்



சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே தொளசம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி முன்பாக காவல்துறையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். இதில் முறையான ஆவணங்கள் மற்றும் உரிமம் இல்லாத வாகனங்கள், எண் பலகை இல்லாத வாகனங்கள் மற்றும் தலைக்கவசம் அணியாத வாகன ஓட்டிகள் மீது சிறப்பு உதவி ஆய்வாளர்கள் அபராதம் விதித்தனர். மேலும் சாலை விதிகள் குறித்தும் அப்போது அறிவுறுத்தப்பட்டது.



சேலம்7 அரசு கலைக் கல்லூரியில் மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் (14.01.2026) வழங்கினார்கள். உடன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், கல்லூரி முதல்வர் (பொ) முனைவர் ஜ.பிரேமலதா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (14.01.2026) ஈரோடு மாநகராட்சி, மண்டலம் 3 வார்டு எண் 34, வாமலை வீதியில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழா 2026 ல் கலந்துகொண்டு, திருக்குறள் ஒப்புவித்த மாணவிக்கு பொன்னாடை அணிவித்து, புத்தகம் வழங்கி, வாழ்த்துக்களைத் தெரிவித்தார். உடன் ஈரோடு மாநகராட்சி துணை ஆணையர் கு.தனலட்சுமி, 3ஆம் மண்டலத்தலைவர் சசிகுமார், செயற்பொறியாளர் ஆனந்த் உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், குமாரவலசு ஊராட்சியில் நேற்று (14.01.2026) நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழா 2026 ல் கலந்துகொண்டு, பாரம்பரிய கலைநிகழ்ச்சியில் பங்கேற்ற கலைஞர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்கள் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், குமாரவலசு ஊராட்சியில் நேற்று (14.01.2026) நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழா 2026 ல் கலந்துகொண்டு, கும்மிப்பாட்டு நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்கள் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், குமாரவலசு ஊராட்சியில் நேற்று (14.01.2026) நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழா 2026 ல் கலந்துகொண்டு, கும்மிப்பாட்டு நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்கள் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டக் காவல் அலுவலகத்தில், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் A.சுஜாதா தலைமையில், நேற்று (14.01.2026) பொங்கல் பண்டிகை மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காவல் அதிகாரிகள், அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் காவலர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு, பாரம்பரிய முறைப்படி பொங்கல் வைத்து இறைவனை வழிபட்டனர்.

# குமாரவலசு ஊராட்சியில் பொங்கல் விழா



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், குமாரவலசு ஊராட்சியில் நேற்று (14.01.2026) நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழா 2026 னை துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா உட்பட பலர் உள்ளனர்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.